www.vskteaches.xyz www.Padasalai.Net www.CBSEtips.in YouTube - @vskteaches

Sivagangai - District

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண்: 9009

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

பகுதி - 1

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 15×1=15

1. "காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் -
அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2. தமிழ் பெற்றுள்ள குணங்களாக தூது இலக்கியம் குறிப்பிடும் குணங்கள்
அ) மூன்று ஆ) நூறு இ) பத்து ஈ) ஆறு

3. வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளைக் குறிப்பிடும் திணை ............
அ) வாகை ஆ) பொதுவியல் இ) தும்பை ஈ) பாடாண்

4. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

5. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

6. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் யார்?
அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர்
இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) சேக்கிழார்

7. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்
இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

8. பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

9. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசிய திறனறித்தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

10. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே இரண்டறிவதுவே அதனொடு நாவே இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

11. திறன் அட்டை என்பவை கீழ்க்கண்டவற்றுள் எதனைக் குறிப்பிடுகிறது?
அ) வங்கி அட்டை ஆ) ஆதார் அட்டை
இ) குடும்ப அட்டை ஈ) ஓட்டுனர் உரிம அட்டை

12. *பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:*
எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே - (காலம் பிறக்கும் முன்)

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.vskteaches.xyz www.Padasalai.Net www.CBSEtips.in YouTube - @vskteaches



12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்?
அ) பெரியபுராணம் ஆ) தமிழோவியம் இ) புறநானூறு ஈ) பட்டமரம்
13. எத்தனை எத்தனை இலக்கணக் குறிப்புத் தருக.
அ) அடுக்குத்தொடர் ஆ) வினைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) விளித்தொடர்
14. இப்பாடலில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) மோனை ஆ) எதுகை இ) முரண் ஈ) இயைபு
15. இப்பாடலை இயற்றியவர்
அ) சேக்கிழார் ஆ) குடபுலவியனார் இ) தமிழன்பன் ஈ) வைரமுத்து

பகுதி - 2 - (மதிப்பெண்கள் - 18)

*பிரிவு - 1*

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**வினா எண் 21 கட்டாய வினா:** 4×2=8

16. *விடைக்கேற்ற வினா அமைக்க:*
அ) மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை எனப்படும்.
ஆ) நமக்குக் கிடைத்த மிகப்பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம் ஆகும்.
17. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
18. ஏறுதழுவுதல் நிழ்வதற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.
19. பழமணல் மாற்றுமின் ; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
20. இணையவழியில் இயங்கும் மின்னனு இயந்திரங்கள் எவையேனும் ஐந்து கூறுக.
21. "மிகுதியான்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

*பிரிவு - 2*

**ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும்:** 5×2=10

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
23. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி கோடிட்ட இடங்களில் நிரப்புக:
அ) உலகில் மூவாயிரம் மொழிகள் ............ (பேசு)
ஆ) தவறுகளைத் ............ (திருத்து)
24. சொல்லுக்குள் சொல் தேடிக் கண்டறிக:
அ) தமிழ்விடுதூது ஆ) பாய்மரக்கப்பல்
25. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:
அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்
26. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக:
அ) பொருந்து - பொருத்து
27. வல்லினம் மிகா இடங்களுக்குச் சான்று தருக.
28. கலைச்சொல் தருக : அ) MISSILE ஆ) HERO STONE

பகுதி - 3 (மதிப்பெண்கள் : 18)

*பிரிவு - 1*

இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2×3=6

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.vskteaches.xyz
www.CBSEtips.in YouTube - @vskteaches



29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன?

30. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

31. *பத்தியைப் படித்து பதில் தருக:*

இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றியவர் டாக்டர். அப்துல்கலாம். தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர். ஏவுகணை, ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் "இந்திய ஏவுகணை நாயகன்" என்று போற்றப்படுகின்றார். பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார். இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியைத் தமிழ் வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அ) இந்திய ஏவுகணை நாயகன் என்று அழைக்கப்படுபவர் யார்?

ஆ) இந்தியாவின் உயரிய விருதாகக் கருதப்படுவது எது?

இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பைத் தருக.

*பிரிவு - 2*

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:** 2×3=6

**(வினா எண் 34 கட்டாய வினா):**

32. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

33. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

34. காடெல்லாம் எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**(அல்லது)**

"அறிவியல் என்னும் வாகனம்" என்னும் ஓ என் சமகாலத் தோழர்களேப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

*பிரிவு - 3* 2×3=6

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:**

35. வல்லினம் மிகும் இடங்களுக்கு மூன்று சான்று தருக.

36. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

37. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக:

| | |
|---|---|
| பசுமண் கலத்து நீர் பெய்திரீஇயற்று | ஒருவனின் செயல்பாடுகளை உரசி அறியும் உரைதல் |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும். | சுடாத மண்கலத்தில் நீருற்றி வைப்பதைப்போல |

பகுதி - 4 (மதிப்பெண்கள் : 25) 5×5=25

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.vskteaches.xyz
www.CBSEtips.in
YouTube - @vskteaches



39. அ) உங்களின் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)


ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக்கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

40. பொன்மொழிகளை மொழி பெயர்க்க:

1. Every flower is a soul blossoming in nature. - Gerard De Nerval.
2. An early morning walk is a blessing for the whole day. - Henry David Thorean.
3. The art of people is a true mirror to their minds. - Nehru.
4. A Nation's culture resides is the hearts and in the soul of its people - Gandhi.
5. The biggest problem is the lack of love and Charity. - Mother Teresa.

41. பெற்றோர் மகிழுமாறு செய்ய வேண்டிய கடமைகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

42. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



பகுதி - 5 (மதிப்பெண்கள் : 24) 3×8=24

43. அ) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.

(அல்லது)

ஆ) ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித்துறையில் தமிழர்கள் ஆற்றிய பங்கினை விவரி.

45. அ) முன்னுரை - அகழாய்வு - அகழாய்வின் சிறப்பு - கீழடி அகழாய்வு - அகழாய்வின் தேவை - பயன் - முடிவுரை.

(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

--------

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com